# யூலை – 29 – பொதுக்கால 17ம் வார ஞாயிறு

**வாழ்வுதரும் உணநானே'' (யோவா. 6:48)**

## முதல் வாசகம் : 2 அரசர் 4: 42 – 44

அக்காலத்தில் பாகால் சாலிசாவைச் சார்ந்த ஒருமனிதர் புது தானியத்தில் செய்யப்பட்ட இருபது வாற்கோதுமை அப்பங் களையும், தம்கோணிப்பையில் முற்றிய தானியக்கதிர்களையும் கடவுளின் அடியவரிடம் கொண்டுவந்தார். எலிசா, ”மக்களுக்கு உண்ணக்கொடு” என்றார்.அவருடைய பணியாளன், ”இந்த நூறுபேருக்கு இதை நான் எப்படிப்பரிமாறுவேன்?” என்றான். அவரோ, ”இவற்றை இம்மக்களுக்கு உண்ணக்கொடு. ஏனெனில் “உண்டபின்னும் மீதி இருக்கும்“ என்று ஆண்டவர் கூறுகிறார்” என்றார்.அவ்வாறே அவன் அவர்களுக்குப் பரிமாற, அவர்கள் உண்டனர். ஆண்டவரது வாக்கின்படி மீதியும் இருந்தது.

**பதில்பாடல் :** ஆண்டவரே எல்லா உயிரினங்களின்
விருப்பத்தை நிறைவேற்றுகிறீர்.

## இரண்டாம் வாசகம் : ஏபேசியர் 4 : 1 – 6

சகோதர சகோதரிகளே! ஆண்டவர் பொருட்டு கைதியாக இருக்கும் நான் உங்களைக் கெஞ்சிக்கேட்கிறேன் நீங்கள் பெற்றுக்கொண்ட அழைப்புக்கு ஏற்பவாழுங்கள்.முழு மனத்தாழ்மையோடும் கனிவோடும் பொறுமையோடும் ஒருவரையொருவர் அன்புடன் தாங்கி, அமைதியுடன் இணைந்து வாழ்ந்து, தூய ஆவி அருளும் ஒருமைப்பாட்டைக் காத்துக்கொள்ள முழு முயற்சி செய்யுங்கள்.நீங்கள் ஒரே எதிர்நோக்கு கொண்டு வாழ அழைக்கப்பட்டிருக்கிறீர்கள். ஒரே எதிர்நோக்கு இருப்பதுபோல, உடலும் ஒன்றே. தூய ஆவியும் ஒன்றே.அவ்வாறே ஆண்டவர் ஒருவரே நாம் கொண்டுள்ள நம்பிக்கை ஒன்றே. திருமுழுக்கு ஒன்றே.எல்லாருக்கும் கடவுளும் தந்தையுமானவர் ஒருவரே அவர் எல்லாருக்கும் மேலானவர் எல்லார் மூலமாகவும் செயலாற்றுபவர் எல்லாருக்குள்ளும் இருப்பவர்.

## நற்செய்தி : யோவான்6 : 1 – 15

அக்காலத்தில் இயேசு கலிலேயக்கடலை கடந்து மறுகரைக்குச் சென்றார். அதற்குத் திபேரியக்கடல் என்றும் பெயர் உண்டு.உடல்நலம் அற்றோருக்கு அவர் செய்துவந்த அரும் அடையாளங்களைக் கண்டு மக்கள் பெருந்திரளாய் அவரைப் பின் தொடர்ந்தனர்.இயேசு மலைமேல் ஏறித் தம்சீடரோடு அமர்ந்தார்.யூதருடைய பாஸ்கா விழா அண்மையில் நிகழவிருந்தது.இயேசு நிமிர்ந்துபார்த்து மக்கள் பெருந்திரளாய் அவரிடம் வருவதைக் கண்டு, ”இவர்கள் உண்பதற்கு நாம் எங்கிருந்து அப்பம் வாங்கலாம்?” என்று பிலிப்பிடம் கேட்டார்.தாம் செய்யப்போவதை அறிந்திருந்தும் அவரைச் சோதிப்பதற்காகவே இக்கேள்வியைக் கேட்டார்.பிலிப்பு மறுமொழியாக, ”இருநூறு தெனாரியத்திற்கு அப்பம் வாங்கினாலும் ஆளுக்கு ஒரு சிறுதுண்டும் கிடைக்காதே” என்றார்.அவருடைய சீடருள் ஒருவரும் சீமோன் பேதுருவின் சகோதரருமான அந்திரேயா,”இங்கே சிறுவன் ஒருவன் இருக்கிறான். அவனிடம் ஐந்து வாற்கோதுமை அப்பங்களும் இரண்டு மீன்களும் உள்ளன. ஆனால் இத்தனை பேருக்கு இவை எப்படிப் போதும்?” என்றார்.இயேசு, ”மக்களை அமரச் செய்யுங்கள்” என்றார். அப்பகுதி முழுவதும் புல்தரையாய் இருந்தது. அமர்ந்திருந்த ஆண்களின் எண்ணிக்கை ஏறக்குறைய ஐயாயிரம்.இயேசு அப்பங்களை எடுத்துக் கடவுளுக்கு நன்றி செலுத்தி அமர்ந்திருந்தோருக்குக் கொடுத்தார். அவ்வாறே மீன்களையும் பகிர்ந்தளித்தார். அவர்களுக்கு வேண்டிய மட்டும் கிடைத்தது. அவர்கள் வயிறார உண்டபின், ”ஒன்றும் வீணாகாதபடி, எஞ்சிய துண்டுகளைச் சேர்த்துவையுங்கள்” என்று தம்சீடரிடம் கூறினார். மக்கள் உண்டபின் ஐந்து வாற்கோதுமை அப்பங்களிலிருந்து எஞ்சிய துண்டுகளைச் சேர்த்துச் சீடர்கள் பன்னிரண்டு கூடைகளில் நிரப்பினார்கள்.இயேசு செய்த இந்த அரும் அடையாளத்தைக் கண்டமக்கள், ”உலகிற்கு வரவிருந்த இறைவாக்கினர் உண்மையில் இவரே” என்றார்கள்.அவர்கள் வந்து தம்மைப் பிடித்துக்கொண்டுபோய் அரசராக்கப்போகிறார்கள் என்பதை உணர்ந்து இயேசு மீண்டும் தனியாய் மலைக்குச் சென்றார்.

**தியானம் :** பொதுக்காலத்தின் 17வது வார ஞாயிறு இறைவார்த்தைகள் வழியாக எம்மேல் உறவாட வந்த இறைவன் உணவாகவும், தம்மை பகிர்ந்துகொள்ளும் தம்மைப் பகிர்ந்து கொள்ளும் முன்னடையாளங்கள தரப்பட்டுள்ளதை நாம் காண்கின்றோம். அங்கே நம்பிக்கையோடு வந்த மக்கள் மீது இறைமகன் இயேசு பரிவு கொண்டு பாலை நிலத்தில் பசியைப் போக்கி களைப்பை ஆற்றுகின்றார்,. அனைவரும் வயிறாரஉண்டனர். அன்றைய அப்பம் பகிர்தல் நிகழ்வில் ஒருநிறைவு இருந்தது. அதிலும் மேலான ஆனந்தத்தை திவ்வியநற்கருணையில் நாம் பெற்றுக்கொள்கிறோம். எம்மோடு உறவாட வந்த தெய்வம் உள்ள உணர்வுகளை புரிந்து கொண்ட தெய்வம், உடல் பசியை போக்கிய தெய்வம். எம் ஆன்ம உணவாக தன்னையே தந்துள்ளார். எனவே வாழ்வுதரும் உணவு நானே என்கின்றார் இயேசு. இன்றைய நற்செய்தியில் நாம் வாசிக்கும் அருஞ்செயலானது எமது நாளாந்த வாழ்வில் பகிர்வு மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளவும் எமக்கு அழைப்புவிடுக்கின்றது. இன்றைய நற்செய்தியில் வாசிக்கும் அருஞ் செயலானது எமது நாளாந்தவாழ்வில் பகிர்வு மனப்பானமையை நம்மில் வளர்த்துக் கொள்ளவும், எமக்குஅழைப்பு விடுக்கின்றது. பகிர்தல் மனப்பான்மையை சீடர்களிடமும், மக்களிடமும் ஏற்படுத்துவது முக்கிய நோக்கம் எனவும் கூறலாம், இயேசு முதல் பகிர்வைத் தொடங்குகிறார். மற்றவர்களும் தங்களிடமிருப்பதை பகிர முன்வந்திருப்பார்கள் அதன் பலனாகவயிறார உண்கிறார்கள். மீதியும் இருக்கின்றது. பகிர்வு ஏற்றத்தாழ்வுகளை உடைக்கின்றது. எல்லோரையும் சமமாக்குகின்றது. அன்றாடம் நாம் உட்கொள்ளும் நற்கருணையும் அதே உணர்வுகளை வளர்க்க எம்மிடம் உள்ள பிரிவுனைகளை களைந்து எல்லோருடனும் பாசத்துடன் வாழ முயலுவோம்.